இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 190 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 07 – புதன்கிழமை 19 பிப்ரவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 190 : Thiruvalluvar Year - 2056 - Maasi 07 - Wednesday 19 February 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தும் ‘திராவிட மாடல்’ ஆட்சியில், தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக முன்னேறி வருகிறது!

# திருச்சி, மதுரையில் ‘டைடல்’ பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாகப் பணிகளைத் தொடங்கி வைத்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூரில், 403 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.58 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை தளம் மற்றும் ஆறு தளங்களுடனும், மதுரை மாநகராட்சி – மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை தளம் மற்றும் பன்னிரண்டு தளங்களுடனும் டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப். 19 -**

**ரூ.717 கோடி மதிப்பீட்டில், 12,000 தகவல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் ‘டைடல்’ பூங்காக்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூரில், 403 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.58 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை தளம் மற்றும் ஆறு தளங்களுடனும், மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை தளம் மற்றும் பன்னிரண்டு தளங்களுடனும் டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

### பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம்!

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். அந்த இலக்கினை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கலைஞரின் தொலைநோக்குப் பார்வை!

2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெறவித்திட்டது. அதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், விழுப்புரம், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் ரூ.330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் 22.11.2024 அன்று திறந்து வைத்தார்.

### திருச்சிராப்பள்ளியில் புதிய டைடல் பூங்கா

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சூழல் அமைப்பை பரவலாக்கும் முயற்சியின் அடுத்தகட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பஞ்சப்பூரில்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# டெல்லியில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கல்வி அமைச்சகம் முற்றுகை!

## மாணவர்கள் கைது!

**புதுடெல்லி, பிப். 19 -**

**தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து டெல்லியில் உள்ள அவரது அலுவலகத்தை மாணவர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.**

மும்மொழி கொள்கையை வலியுறுத்தும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் கல்வி நிதி வழங்கப்படும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவத்துடன் தெரிவித்துள்ளார். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய அமைச்சருக்கும் எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன.

இந்நிலையில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து, டெல்லியில் உள்ள கல்வி அமைச்சகத்தை மாணவர்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அகில இந்திய மாணவர் கூட்டமைப்பினரை டெல்லி காவல்துறையினர் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதேபோன்று இந்தியா முழுவதும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து பல்வேறு அரசியல் கட்சியினர், மாணவர்கள் போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

### தமிழ்நாட்டில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டில் அண்ணா அவர்களின் இருமொழி கொள்கைக்குப் புறம்பான ஒன்றிய பா.ஜ.க.வின் மும்மொழி திட்டத்தை எதிர்த்தும், தமிழ்நாட்டிற்கு மும்மொழி திட்டத்தை அமல்படுத்தினால்தான் நிதி ஒதுக்கப்படும் என்று தன்னிச்சையாக கூறிய ஒன்றிய கல்வி அமைச்சரைக் கண்டித்தும் இந்தியா கூட்டணி சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், தோழர்கள் லட்சக்கணக்கானோர் பங்கேற்று ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி

## புதிய தேர்தல் ஆணையர்கள் நியமனம்!

### பிரசாத் பூஷன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப். 19 –

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி புதிய தேர்தல் ஆணையர்களை ஒன்றிய அரசு நியமித்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதி மன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் முறையிட்டார். தேர்தல் ஆணையர் நியமன சட்டத்துக்கு எதிரான வழக்கு இன்று விசாரணைக்கு வர உள்ள நிலையில், புதிய தலைமை தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் வகையில் ஒன்றிய அரசு புதிய தலைமை தேர்தல் ஆணையர் நியமனத்தை நடத்தி உள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

சட்டப்பேரவையில்

# தமிழக பட்ஜெட் மார்ச் 14ல் தாக்கல்!

## பேரவைத் தலைவர் அப்பாவு அறிவிப்பு!

சென்னை, பிப். 19 -

தமிழக சட்டப்பேரவையில் வரும் மார்ச் 14ம் தேதி 2025-26ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சபா நாயகர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



தமிழக சட்டப்பேரவையின் அடுத்தக் கட்ட கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் வரும் மார்ச் 14ம் தேதி (வெள்ளிக்கிழமை) கூட்டப்படுகிறது. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு 2025-26ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட்டை நிதி யமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்வார்.

அதைத்தொடர்ந்து 2025-26ம் ஆண்டுக்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மற்றும் 2024-25ம் ஆண்டின் கூடுதல் செலவீனங்களுக்கான மானியக் கோரிக்கைகள் ஆகியவை வரும் மார்ச் 21ம் தேதி (வெள்ளிக்கிழமை) தாக்கல் செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

புலியைச் சீண்டும் பொல்லாத பாஜக

